# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி... முதல்பக்கத் தொடர்ச்சி

இந்த ஆய்வின்போது கட்டுப்பாட்டு அறையில் அனைத்து துறை பணியாளர்கள் கண்காணிப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்களுடன் தொடர்பு கெண்டு பணியாற்றி வருவதையும், எல்.ஈ.டி திரை மூலம் மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டும் ஆய்வு செய்தார்.

பின்னர் துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

வடகிழக்கு பருவமழை சென்னை மாநகராட்சி பகுதிகளில் நேற்று காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் 4.6 செ.மீ மழை பெய்திருக்கிறது. இதில் அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் பகுதியில், 6.1 செ.மீட்டரும், தேனாம்பேட்டையில் 6.1செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது. குறைந்தபட்சமாக தண்டையார்பேட்டையில் 2.8 செ.மீட்டர் மழையும், புழல் பகுதியில் 3.0 செ.மீட்டரும், மாதவரத்தில் 4.0 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது.

**நிவாரண மையங்களில் பால், பிரட் உணவு தயார்!**

மழையின் காரணமாக சென்னை பெருநகர மாநகராட்சி பகுதியில் 8 மரங்கள் விழுந்துள்ளன. ஒரு மரம் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 மரங்களை அகற்றும் பணிகள் இன்னும் 1 மணி நேரத்தில் முடிக்கப்படும். சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் 50 முதல் 1,000 நபர்கள் தங்கும் வகையிலான நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளன. இந்த நிவாரண மையங்களில் தண்ணீர், பால்பாக்கெட், பிஸ்கெட், பிரட், உணவு ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 35 பொது சமயலறைகள் தயார் நிலையில் உள்ளன. சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் 20 சுரங்க பாதைகளில் எந்தவித இடையூறுமின்றி போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. கணேசபுரம், பெரம்பூர் ஆகிய இரண்டு சுரங்க பாதைகள் மட்டும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

அந்த சுரங்கப்பாதைகளிலும் மோட்டார் பம்ப் மூலமாக தண்ணீர் அகற்றப்பட்டு வருகின்றது. மழை ஒரு மணிநேரம் விட்டால் அந்த சுரங்கபாதைகளும் சரி செய்யப்பட்டு விடும். நீர்தேங்கியுள்ள 300 க்கும் மேற்பட்ட இடங்களில் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மீட்புப் பணிகளில் படகுகள் தயார்!**

கடந்த 24 மணிநேரத்தில் எங்கும் மின் தடை ஏற்படவில்லை. கடந்த 12 மணிநேரத்தில் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறைக்கு 1,500 அழைப்புகள் வந்துள்ளன. இதில் 600 அழைப்புகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டை பொறுத்தவரை சிவகங்கை மாவட்டத்தில் அதிகபட்சமாக 13.5 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. விருதுநகரில் 7 செ.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களில் மாநில பேரிடர் மீட்புக்குழு மற்றும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 26 இடங்களில் பணிபுரிய தயார் நிலையில் உள்ளனர். இது வரை 24 குழுக்கள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களுக்கு சென்றடைந்துள்ளனர். மீட்புப்பணியில் ஈடுபட சென்னையில் 89 படகுகளும், பிறமாவட்டங்களில் 130 படகுகளும் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் 300 நிவாரண மையங்களும், சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களில் 631 நிவாரண மையங்கள் என மொத்தம் 931 மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் 15 ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும், அனைத்து மாவட்டங்களில் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வெள்ளத்தை கண்காணிக்க கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மழைக் கால மருத்துவ முகாம்கள்!**

இன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறையின் சார்பில் தமிழகம் முழுவதும் 1,000 இடங்களில் மழைக்கால மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் 100 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் 13,000 தன்னார்வலர்கள் பணியில் ஈடுபட பதிவு செய்துள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் 65,000 தன்னார்வலர்கள் தயாராக உள்ளனர். தேவைப்பட்டால் பிறமாவட்ட தன்னார்வலர்கள் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, துணை முதலமைச்சரின் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் திரு.தாரேஸ் அகமது மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! ஆர்.எஸ்.எஸ் அமைப்பு கடந்த 11.10.2024 அன்று நூறாவது ஆண்டினை எட்டிப் பிடித்திருப்பது கண்டு பெருமை கொண்டு பாராட்டிய செய்தியில் பிரதமர் மோடி, அந்த அமைப்பின் தடையற்ற பயணத்தைப் ( uninterrupted journey ) பற்றிக் குறிப்பிட்டுள்ளாரே ?

**பெரியதம்பி :** **இந்திய விடுதலைக்குப் பிறகு, ஆர். எஸ்.எஸ். அமைப்பு இதுவரை மூன்று முறை தடை செய்யப்பட்ட இயக்கம்.**

**1948ல் சர்தார் வல்லபாய் பட்டேல் உள்துறை அமைச்சராக இருந்தபோது முதல் முறையாகத் தடை உத்தரவு பிறப்பித்தார்.**

**அவசரநிலைப் பிரகடனத்தை ஒட்டி 1975ல் இரண்டாவது முறையும்; 1992ல் பா.ஜ.க. தலைமையில் அயோத்தியில் பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்டதை ஒட்டி மூன்றாவது முறையும் தடை செய்யப்பட்டது.**

**இந்தத் தடைகளையெல்லாம் பூசி மெழுகி, தடையில்லாப் பயணம் என்று பிரதமர் குறிப்பிட்டிருப்பது, வழக்கம் போல உண்மையை மறைத்து, வரலாற்றைத் திருத்தி எழுதும் பா.ஜ.க.வின் சூழ்ச்சித் திறனையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது !**

### தமிழகம் முழுவதும் கனமழை

# அதிக முனைப்போடும் எச்சரிக்கையோடும் அரசு தீவிர நடவடிக்கை!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 16 -

தமிழகம் முழுவதும் அதிகன மழையை எதிர்கொள்ள அதிக முனைப்போடும் எச்சரிக்கையோடும் அரசு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாரட்டியுள்ளது.

இதுகுறித்து 15.10.2024 தேதிய ‘தினகரன்’ தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:-

தென்கிழக்கு வங்கக்கடலில் நேற்று அதிகாலை குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடையும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அடுத்த 2 நாட்களுக்கு மிக கனமழை முதல் அதிகனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு நாளை ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அவர் அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

விவசாயிகள், மீனவர்கள், நான்கு சக்கர மற்றும் இரு சக்கர வாகன உரிமையாளர்கள், விடுதிகளில் தங்கி இருப்பவர்கள், பயணங்களை திட்டமிட்டுள்ளவர்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள், தொழிற்பேட்டைகள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், நடைபாதை வியாபாரிகள், கட்டுமான பணியை மேற்கொள்பவர்கள் கனமழைக்கான முன்னேற்பாடு களை செய்து கொள்ள வேண்டும். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள், முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு செல்ல வேண்டும். கடற்கரை, சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், நீர்நிலைகள் ஆகிய பகுதிகளில் கூட வேண்டாம். அறுந்து கிடக்கும் மின் கம்பிகளில் இருந்து விலகி இருக்க வேண்டும். கர்ப்பிணி பெண்கள், நோயாளிகள், முதியவர்கள் ஆகியோருக்கு தேவையான முன்னேற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும்.



தினகரன்

அக்டோபர் 15, 2024 செவ்வாய்க்கிழமை

தயார் நிலையில் அரசு

தென்கிழக்கு வங்கக்கடலில் நேற்று அதிகாலை குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடையும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அடுத்த 2 நாட்களுக்கு மிக கனமழை முதல் அதிகனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு நாளை ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அவர் அறிவுரைகள் வழங்கியுள்ளார். விவசாயிகள், மீனவர்கள், நான்கு சக்கர மற்றும் இரு சக்கர வாகன உரிமையாளர்கள், விடுதிகளில் தங்கி இருப்பவர்கள், பயணங்களை திட்டமிட்டுள்ளவர்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள், தொழிற்பேட்டைகள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,

பொதுமக்கள் சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம். அரசு அலுவலர்கள் அளிக்கும் முன்னெச்சரிக்கைகளின்படி நடந்து கொள்ள வேண்டும். குடிநீர், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு இன்றி கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு உதவி எண்கள், செயலி, வாட்ஸ் அப் எண்கள் என பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை தமிழக அரசு செய்துள்ளது. மழைநீர் அதிகளவு தேங்கும் இடங்களில் மழை நீரை உடனடியாக அப்புறப்படுத்த சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகராட்சி ஊழியர்கள் 21 ஆயிரம் பேர் சுழற்சி முறையில் பணியாற்றவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மழை பாதிப்பு அதிகம் எதிர்பார்க்கப்படும் மற்ற மாவட்டங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழை தொடர்பான புகார்கள் அளிக்க 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் நீர்நிலைகளை கண்காணிக்க வேண்டும். ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரிகள் உடனடியாக செல்ல வேண்டும் என தலைமை செயலாளர் முருகானந்தம் அறிவுறுத்தி உள்ளார். தேவையான இடங்களில் பேரிடர் மீட்பு படை மற்றும் படகுகள் நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மின் உற்பத்தி தடைபடாமல் இருக்கவும், மின் விநியோகம் சீராக இருக்கவும், கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதலான பணியாளர்கள் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். சமூக வலைதளம் மூலம் புகார் அளிப்பவர்கள் மின் இணைப்பு எண்ணுடன் புகாரை பதிவிட்டால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் வசதிக்காக மெட்ரோ ரயில் மற்றும் பறக்கும் ரயில்களின் சேவைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். 15ம் தேதி முதல் 18ம் தேதி வரை தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஊழியர்களை வீட்டில் இருந்தபடி பணிபுரிய அறிவுறுத்த வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பிற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழகம் முழுவதும் அதிகனமழையை எதிர்கொள்ள அரசும், அரசு இயந்திரமும் அதிக முனைப்போடும், எச்சரிக்கையோடும் தீவிர நடவடிக்கையில் இறங்கி உள்ளது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறியுள்ளது.

### வா.மு.சே.திருவள்ளுவரின்

# ‘சுற்றுமாச் சுற்றும்’ நூல் அறிமுக விழா!

## ஔவை அருள் தலைமை! மைக்கேல் பாரடே – தளபதி பங்கேற்பு!

சென்னை, அக். 16-

தமிழ்மாமணி வா.மு.சே.திருவள்ளுவரின் சுற்றுமாச் சுற்றும் நூல் அறிமுக விழா இன்று (15.10.2024) மாலை 6 மணிக்கு சென்னை பாரிமுனை, என்.எஸ்.சி.போஸ் சாலையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் தலைமை வகிக்கிறார்.

முனைவர் மோ.மைக்கேல் பாரடே ஆய்வுரையும், இதழாளர் தளபதி வாழ்த்துரையும் வழங்குகின்றனர்.

தமிழ்மாமணி வா.மு.சே.திருவள்ளுவர் ஏற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் டாக்டர் பெஞ்சமின் பிராங்கிளின், சே.சு.அன்பு, முனைவர் ப.தாமரைக் கண்ணன், பா.ஆசீர் பாண்டியன், ஆ.டென்னீஸ், புலவர் பு.சீ. கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி

# பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது!

## மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, அக் 16-

மதுரை தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய,நகர, பகுதி, பேரூர், கழக அளவில் தி.மு.க பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப் பிக்கலாம் என்று மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

அதன்விபரம்

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக பொறியாளர் அணியின் ஒன்றிய, நகர,



பகுதி, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணிக்கு நிர்வாகிகளை விண்ணப்பம் மூலம் தேர்வு செய்திடகழக பொறியாளர் அணிச்செயலாளர் எஸ்.கே.பி. கருணா அறிவித்துள்ளார்.அவரது அறிவிப்புக்கு இணங்க

மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதிக் கழக, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி நிர்வாகிள் பொறுப்புக்கு விருப்ப முள்ளவர்கள் இணையதளம் மூலம் விண் ணப்பம் செய்திட வேண்டும். அதற்கென பிரத்யேக கியூ ஆர் கோடு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கியூ ஆர் கோடானது நமது மதுரை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்திலும், அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அலுவலகங்களிலும் உள்ளது.

ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு பி.இ அல்லது டிப்ளமோ படித்திருக்க வேண்டும். இல்லையெனில்

பொறியியல் அல்லது பட்டய படிப்பு (டிப்ளமோ) கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள் இருபாலரும் விண்ணப்பம் செய்யலாம்.

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக ஐந்து பேர் தேர்வு செய்யப்படுவர்.

மேற்கண்ட விதிமுறைகளின் படி நடைபெறும் பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான பொறுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களுக்கு உட் பட்ட பொறியாளர் அணி தோழர்கள் விண்ணப்பம் செய்திடவும், அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் செய்திட கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

## கன மழை: பல்லாவரத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு!

பல்லவபுரம், அக்.16–

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் (மண்டலம்2) பகுதிகளில் தீவிரமடைந்து வரும் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குரோம்பேட்டில் உள்ள மண்டல அலுவலகத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை முன்னிலையில் மாநகராட்சி அதிகாரிகள் மின்சார துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் நல சங்க நிர்வாகிகள் ஆகியவர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தீவிர மடைந்து வரும் பருவமழை தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகள் பள்ளிகள் மற்றும் அனைத்து திருமண மண்டபங்களிலும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



மதுரை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அவைத்தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் முன்னிலையில் நடைபெற்றதில், மூத்த பத்திரிகையாளர், முரசொலி ஆசிரியர், முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி, 2026 சட்டமன்றத் தேர்தல் எதிர்கொள்வது, துணை முதல்வராக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அறிவித்தமைக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தல், மழைக்காலங்களில் மக்களுடன் கழகத்தினர் துணை நிற்க வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை விளக்கி மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், சின்னம்மாள், முருகவேல், ராகவன், சௌந்தரராஜன், சமட்டிபுரம் கணேசன், வீர கணேசன், துரை கோபால் என்கிற அன்பு மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்